**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர், நாள்.02.04.2020**

2020ம் ஆண்டு மார்ச் மாதம் 02.04.2020ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி. ரா.கமலா,பி.காம்
ஆணையாளர் (பொ) மற்றும் தனிஅலுவலர்

**1)**போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு கிருமி நாசினிகளை பொது சுகாதார அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்யவும் மேலும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விவரம் | அளவு |
|---|---|---|
| 1. | லைசால் | 500 லிட்டர் |
| 2. | சுண்ணாம்புத்தூள் | 40000 கிலோ |
| 3. | பிளிச்சிங் பவுடர் | 15000 கிலோ |

**அலுவலகக் குறிப்பு:**

1. இந்நகராட்சி பகுதிகளில் கொரொனா வைரஸ் தொற்று அதிகளவில் பரவி வருவதால் மேற்கண்ட லைசால் மற்றும் பிளிச்சிங் பவுடர் கிருமிநாசினிகளை விரைந்து கொள்முதல் செய்ய ஆணையாளரின் முன்அனுமதியினை ஏற்று தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ்,திருச்சி நிறுவனத்தி வேலை உத்தரவு வழங்கப்பட்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கன்ட பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொன்டு சுண்ணாம்புத்தூள் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட இசையா அசோசியேட்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய அந்நிறுவனத்திற்கு ஆணையாளரின் முன்அனுமதியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.
3. கூடுதல் செலவினங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 84** அனுமதிக்கப்பட்டது.

**2)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TATA ACE ( TN 60 AW 6015, TN 60 AW 6019, TN 60 S 2049 ) வாகனங்களுக்கு புதிதாக டயர்களை மாற்றி வழங்குவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளி மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ கற்பகம் சைக்கிள் மார்ட் டயர்ஸ் 100, பள்ளிவாசல் வணிக வளாகம், கம்பம் ரோடு, தேனி | 32,700/- |
| 2 | அருணா சைக்கிள் மார்ட், PH ரோடு போடிநாயக்கனூர். | 37,620/– |

**அலுவலகக்குறிப்பு:–** பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ கற்பகம் சைக்கிள் மார்ட் டயர்ஸ், தேனி. நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**
**தீர்மான எண் : 85** அனுமதிக்கப்பட்டது.

**3)** போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 7 வார்டுகளில் கொரொனா வைரஸ் நோய் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக உள்ளதால் அவர்கள் கண்டறியப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் அதனை தடுக்கும் பொருட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிளக்ஸ் பேனர்களும், வீடு வீடாக சென்று மளிகை மற்றும் பலசரக்கு பொருட்கள் விநியோகம் செய்யக்கூடிய நபர்கள் மற்றும் அவர்களது தொலைபேசி எண்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் அச்சிட்டு பொதுமக்களுக்கு வழங்கவும், நகர் முழுவதும் கிருமி நாசினி தெளிக்கும் பொருட்டு பொது சுகாதார பணி பாதிப்படையா வண்ணம் வாடகைக்கு TATA ACE வாகனம் மூலம் கிருமி நாசினி தெளிக்கும் பணி மேற்கொள்ளவும், மேலும் அதற்கான கிருமி நாசினியான சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசலும், Personal Protective Equipment வாங்கவும், முகவுறையும் வாங்கி வழங்கவும் மற்றும் தணிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நபர்களுக்கு தினந்தோரும் 3 வேலைகள் உணவு வழங்கவும் ஆகும் தோராய செலவினம் ரூ.20 இலட்சம் செலவினங்களுக்கு கொரோனா தடுப்பு நிதி வரும் வரையில் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேலும் அதற்கான நிதி வரப்பெற்ற பின்பு அதனை ஈடுசெய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**
**தீர்மான எண் : 86** அனுமதிக்கப்பட்டது.

4)போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கள் மேற்கொள்ள வீடு வீடாக சென்று மளிகை மற்றும் பலசரக்கு பொருட்கள் விநியோகம் செய்யக்கூடிய நபர்கள் மற்றும் அவர்களது தொலைபேசி எண்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் அச்சிடுவதற்கு கீழ்கண்ட விவரப்படியாக விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதனை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | எண்ணம் | தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | ஈஸ்வரி பிரிண்டர்ஸ், போடி | 20000 | 26,500/- |
| 3 | ஸ்ரீ ஆனந்தம் ஆப்செட் பிரஸ், போடி | 20000 | 25,000/- |

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ ஆனந்தம் ஆப்செட் பிரஸ், போடி, நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 87** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**5)** போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கள் மேற்கொள்ள நகர் முழுவதும் கிருமி நாசினி தெளிக்கும் பொருட்டு பொது சுகாதார பணிகள் பாதிப்படையா வண்ணம் TATA ACE வாகனம் வாடகைக்கு பெற்று பணி மேற்கொள்ளவும், மேலும் அதற்கான கிருமி நாசினியான சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல் கொள்முதல் செய்யவும் கீழ்கண்ட விவரப்படியாக விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதனை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

அ). TATA ACE வாகனம் வாடகைக்கு பெறுவதற்கு

| வ. எண் | நிறுவனம் | தொகை. ரூ. ஒரு நாளைக்கு |
|---|---|---|
| 1 | S.S.T.Traders, போடி | 2,000/- |
| 3 | இரத்தினசாமி இளரக வாகனம், போடி | 2,600/- |

அ). சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல் கொள்முதல் செய்ய

| வ. எண் | நிறுவனம் | தொகை. ரூ. ஒரு லிட்டர் |
|---|---|---|
| 1 | Shri Sathya dyes & chemicals, ஆண்டிபட்டி | 19.47/- |

| | | |
|---|---|---|
| 3 | People Chemical Industries<br>ஆண்டிபட்டி | 18.88/- |

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி TATA ACE வாகனம் வாடகைக்கு பெறுவதற்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய S.S.T.Traders, போடி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல் கொள்முதல் செய்ய People Chemical Industries, ஆண்டிபட்டி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 88** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**6)**போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கள் மேற்கொள்ள நகர் முழுவதும் கிருமி நாசினி தெளிக்கும் பொருட்டு கீழ்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதனை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

அ). தேவையான பொருட்கள்

| வ.எண் | விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | HTP 18/100 WITH ENGINE | 05 |
| 2 | DELIVERY HOSE-50MT | 10 |
| 3 | HYJET GUN STEEL 2FT | 10 |
| 4 | SPRAYER-16LIT | 01 |

ஆ). விலைப்புள்ளிகள்

| வ. எண் | நிறுவனம் | தொகை. ரூ. ஒரு லிட்டர் |
|---|---|---|
| 1 | விஜயா அக்ரோ ஏஜென்ஸிஸ், தேனி | 74,500/- |
| 2 | விக்னேஷ் அக்ரோ ப்ரோடாக்ட்ஸ், தேனி | 75,100/- |

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய விஜயா அக்ரோ ஏஜென்ஸிஸ், தேனி. நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 89** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7)போடிநாயக்கனூர் நகராட்சியில் பரவிவரும் கொரோனா தொற்றை சமாளிக்கும் பொருட்டு தமிழக அரசின் 144 தடை உத்திரவின் பேரில் காவல் துறை துணை கண்காணிப்பாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின் படி இந்நகராட்சி பகுதிகளின் பட்டியலில் கண்டவாறு சுமார் 42 இடங்களில் பொதுமக்கள் அதிகம் கடக்கும் பகுதியாகவும் நோய் தொற்று உள்ள குடியிருப்பை சுற்றியுள்ள பகுதிகளை நகரின் பிற பகுதிகளில் இருந்து தனிமைப்படுத்தவும் மரக்கம்புகளால் ஆன தடுப்பு அமைக்கவும் அதனுடன் இரும்பு தகடுகள் அடித்து பொதுமக்கள் செல்லாத வகையில் ஏற்பாடு செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.1.00/—ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி 1.04.2020ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரபெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **திரு.எல்.எல்லப்பன், போடி.** | **யோகேஷ் எலெக்ட்ரிக்கல்ஸ், தேனி** | **கே.ஏ.ஆர் கன்ஸ்ட்ரக்சன், தேனி** |
|---|---|---|---|---|
| 1 | உயர படுக்கை வாக்கில் 5 சவுக்கு மரமும், 10 அடிக்கு ஒன்று வீதம் ஊண்டுவதற்கு சவுக்கு மரமும், பின்னர் தகரம் மூலம் தடுப்பு அமைக்க, வண்டி வாடகை கயிறு, சவுக்கு மர வாடகை, தகர வாடகை, ஆள்கூலி சேர்த்து | ரூ.250/— | ரூ.260/— | ரூ.265/— |

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று ஒப்பீடு செய்யப்பட்டதில் **திரு.எல்.எல்லப்பன்,போடி.** அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 1055 /2020/இ1**

**தீர்மான எண் : 90** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி